கொழும்புப் பல்கலைக்கழகம்

சிறப்புக் கலை / கற்கைப் பிரிவுக் கலைமாணிப் பரீட்சை (புவியியல்) பகுதி-I

முதலாம் பருவ இறுதிப்பரீட்சை – 2017/18

**GYG 2133 - இலங்கையின் பௌதிகச் சூழல்**

**நேரம் 2 மணித்தியாலங்கள்**

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

இலங்கைப் புறவுருவப்படங்கள் வழங்கப்படும்.

---

1) i. தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் கேம்பிரியனுக்கு முற்பட்ட காலப் புவிச்சரிதவியல் அலகுளை குறித்துப் பெயரிடுக.

(05 புள்ளிகள்)

ii. வினா (i) இல் நீர் குறிப்பிட்ட புவிச்சரிதவியல் அலகுகளில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்து அதன் முனைப்பான பண்புகளை பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

2) i. இலங்கையில் பிரதான மழைவீழ்ச்சிப் பருவங்களையும் அவற்றின் காலப்பகுதிகளையும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. “இலங்கையில் பருவகால மழைவீழ்ச்சிப் பரம்பலானது குறிப்பிடத்தக்க இடம்சார்ந்த வேறுபாடுகளுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது” இக்கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(14 புள்ளிகள்)

3) i. மண் வளத்தின் முக்கியத்துவத்தினை வரண்ட வலயத்துடன் தொடர்புபடுத்தி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்).

ii. “இலங்கையில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தில் பல்வேறுபட்ட தடைகள் காணப்படுகின்றன” பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(15 புள்ளிகள்)

4) i. "நீர் தாங்குபடுக்கை" (Aquifer) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

ii. இலங்கையில் தரைக்கீழ் நீர் மாசடைதலில் தாக்கம் செலுத்தும் மானிடக் காரணிகள் பற்றிப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

5) i. வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் தாவரப்பூங்காப் (floristic) பிரதேசங்களை எல்லைப்படுத்துக.

(05 புள்ளிகள்)

ii. இலங்கையில் பசுமைப்போர்வைகளை செழிமைப்படுத்தலுக்கும் மற்றும் முகாமை செய்தலுக்கும் நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

6) i. இலங்கையில் (அ) வளிமண்டல வெப்பநிலை மற்றும் (ஆ) மழைவீழ்ச்சி அடிப்படையில் எழுந்துள்ள காலநிலை மாற்றம் யாவை?

(06 புள்ளிகள்)

ii. இலங்கையில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.

(14 புள்ளிகள்)